**(Under Section 173 BNSS)**
**(BNSS பிரிவு 173 இன் கீழ்)**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
(கு.ந~~.வி.தொ.பிரிவு 154~~ இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129854

1. District : மாவட்டம் திருச்சி PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 08 Date: நாள் 02.07.24

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (திருத்தம் 2018) Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 26.06.24 Date to : நாள் வரை 29.06.24

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 Hrs Time to : நேரம் வரை 15.00 Hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.07.24 Time : நேரம் 18.00 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.07.24 Time : நேரம் 18.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைப் செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 km வடமேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி – தொட்டியம் உதவி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தங்கராசு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.01.75 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி எண். 2/64, கவரப்பட்டி, நாகையநல்லூர், தொட்டியம் (TK), திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மாறன், உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தொட்டியம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
2/7/24

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Balamurugan
Rank: நிலை Inspector of Police V&AC, Trichy No. எண் ……

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

<u>திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2024-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், நேற்று 01.07.2024 பணியில் இருந்த போது மாலை 18.00 மணியளவில் திருச்சி மாவட்டம், தொட்டியம் தாலுகா, நாகையநல்லூர் அஞ்சல், கவரபட்டி கிராமம், எண்.2/89 வசிக்கும் முத்துசாமி மகன் தங்கராசு என்பவர் நிலயம் ஆஜராகி, கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், தொட்டியம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உதவி செயற்பொறியாளர் திரு.மாறன் மற்றும் புகார்தாரர் திரு.தங்கராசு ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 02.07.2024 காலை 07.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.08/2024 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி, நாள்:01.07.2024. அனுப்புநர் மு.தங்கராசு, த/பெ முத்துசாமி, எண்.2/89, கவரப்பட்டி கிராமம், நாகையநல்லூர் அஞ்சல், தொட்டியம் தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திருச்சி. ஐயா, நான்

திருச்சி மாவட்டம் தொட்டியம் தாலுகா, கவரபட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கும், எனது அண்ணன் கணேசனுக்கும் பூர்வீகமாக இருந்த 5 ஏக்கர் நிலத்தினை பாதியாக பிரித்து, எனக்கு உண்டான இரண்டரை ஏக்கர் நிலத்தில் நான் விவசாயம் செய்தும், 8 கறவைமாடுகள் வைத்து சொசைட்டிக்கு பால் ஊற்றியும் வருகிறேன். எங்க இருவருக்கும் பொதுவான கேணியானது எனது அண்ணன் பங்கில் உள்ளது. அதில் இலவச கரண்ட்டில் இருவரும் தண்ணீர் பாய்ச்சி வந்தோம். மேலும், அந்த கேணியில் அவ்வப்போது தண்ணீர் வற்றியதாலும், அண்ணன் போர் போட ஒத்து வராததாலும் எனக்கு சொந்தமான நிலத்தில் நான் தனியாக போர் போட்டுக் கொண்டேன். கிணற்றில் தண்ணீர் இல்லாதபோது எனது வயலுக்கு எனது போரிலிருந்து தண்ணீர் பாய்ச்ச இலவச மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்வேன். இதனால் எனக்கும் எனது அண்ணனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லை. இந்தநிலையில் எனது அண்ணி சுமதி நான் போரிலிருந்து தண்ணீர் எடுக்க இலவச மின்சாரத்தை பயன்படுத்துகிறேன் என்று மின்சார வாரியத்திற்கு புகார் அளித்தார். அந்த புகாரின்பேரில், மின்வாரிய அதிகாரிகள் வந்து பார்த்து விசாரணை செய்துவிட்டு, கேணியில் மட்டுமே இலவச கரண்ட்டை பயன்படுத்த வேண்டும் என்று எச்சரித்தார்கள். அதனால், இருவரும் இலவச கரண்டை பயன்படுத்தாமல் இருந்து வந்தோம். எனது வீட்டு கரண்ட்டின் மூலம் எனது போரிலிருந்து தண்ணீர் எடுத்து குளிக்க, மாடுகளுக்கு தீவண புல்லுக்கும் விட பயன்படுத்தி வந்தேன். எனது அண்ணி சுமதி, நான் வீட்டு கரண்ட்டிலிருந்து விவசாயம் செய்கிறேன் என்று மீண்டும் மின்வாரியத்திற்கு புகார் கொடுத்ததால், மின்வாரிய அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டு, நான் விளக்கமளித்தும்

கேட்காமல், எனக்கு 3,943/= ரூபாய் அபராதம் விதித்து விட்டனர், நான் 06.05.2024 தேதி பைனை கட்டிவிட்டேன். மாடுகளுக்கு தீவனத்திற்கு தண்ணீர் தேவைபட்டதால் வேறு வழியில்லாமல் வீட்டு கரண்டை கமர்சியல் கரண்ட்டுக்கு 07.06.2024 தேதி, கமர்சியலுக்கு உண்டான தொகைகளை கட்டிவிட்டு மோட்டாரை பயன்படுத்தி வந்தேன். பின், 25.06.2024 தேதி மதியம் ரெண்டே முக்கால் மணிக்கு என்னுடைய செல்போனுக்கு, நான் ஈ.பி ஏ.டி, பேசுகிறேன் என்று சொல்லி, உன்மீது சுமதி என்பவர் புகார் கொடுத்துள்ளார், நீ தொட்டியம் ஆபீசுக்கு நாளைக்கு வந்து என்னை பார் என்று கூறினார். அதனால் நான் 26.06.2024 தேதி மதியம் 3 மணிக்கு தொட்டியத்திலுள்ள ஈ.பி ஆபீசுக்கு போய் அங்கிருந்த ஏ.டி. மாறன் சாரை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம், உன் ஈ.பி கனெக்சன கமர்சியலுக்கு ஏற்பாடு பண்ணி மாத்திக் கொடுத்திட்டேன். அதுக்கு நீ எனக்கு எதுவும் செய்யல, மேலும், அந்தம்மா சுமதி உன்மேல கொடுத்த புகார உனக்கு சாதகமாக எழுதி அனுப்பனும், அதனால ரெண்டாயிரம் ரூவா கொடு, இனிமே பிரச்சனை இல்லாம பாத்துக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், சார் நான் ஏற்கனவே, பைன் கட்டிட்டு வீட்டு கரண்ட்ட கமர்சியலா மாத்தி அதுக்கும் பணம் கட்டிட்டேன். இதுக்குமேலும் பணம் கேட்டா எப்படி சார் என்றேன். அதற்கு அவர் அதெல்லாம் பேசாத, உன்மேல உள்ள பெட்டிசன முடிக்கணும் அதுக்கும், உன் வீட்டு கரண்ட்ட கமர்சியலா மாத்தினதுக்கும் எனக்கு தனியா ரெண்டாயிரம் கொண்டு வந்து கொடுத்திடு, இல்லன்னா உன் வீட்டு மோட்டாரை சீஸ் பண்ணிருவேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், சார் மாச கடைசியா இருக்கு, கையில பணம் இல்ல, பணம் வர இன்னும் ரெண்டு மூனு நாள் ஆகும் சார் என்றேன். அதற்கு அவர், அப்படீன்னா ரெண்டாயிரம் எடுத்துகிட்டு வெள்ளிக்கிழமை வந்து என்ன பாத்து கொடுத்திடு என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. வந்து தருகிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். 29.06.2024 தேதி அன்று மதியம் 03.00 மணிக்கு தொட்டியம் ஏ.டி அவரது போனிலிருந்து எனக்கு போன் பண்ணி ஏன் வெள்ளிக்கிழமை வரல என்று கேட்டார், அதற்கு நான் பணம் ரெடியாகலை சார் என்றதும், ரெண்டாயிரத்தை ரெடி பண்ணி திங்கள் செவ்வாய்க்குள்ள கொடுத்திடு என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. மீண்டும் லஞ்சம் கேட்டு வற்புறுத்தியதால் பணம் ரெடி பண்ணிட்டு வந்து தருகிறேன் சார் என்று சொல்லிவிட்டு வைத்து விட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட ஏ.டி. மாறன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxxx (Mதங்கராசு) Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the trail of Prevention of Corruption Act cases, Trichy. Received this report at 18.00 Hrs., on 01.07.2024 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.08/2024 u/s 7 of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 07.00 Hrs., on 02.07.2024. Sd.xxx (K.Balamurugan)2/7/24 Inspector of Police, V&AC, Trichy.

2/7/24
Inspector of Police,
V&AC, Trichy.